## IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | OS.. No. | : | **26/2015** |
| | | P/W's | : | **PW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | சுந்தரம் பூசாரி | CASTE | : | |
| S/O | கருப்பையா பூசாரி | RELIGION | : | இந்து |
| VILLAGE | சோழவந்தான் | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | **71** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 23.01.2026**

**15ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. கோவில் சொத்து அமைந்துள்ள சர்வே எண்கள் 811/30, 31, 32, 33, 34, 35, 37. வழக்குச்சொத்து அமைந்துள்ள சர்வே எண் 811/31. சர்வே எண் 811/30, 31, 32 மூன்றும் திருக்கோவிலுக்கு சொந்தமானவை என்றால் சரிதான். சர்வே எண் 811/31ல் ஆஞ்சநேயர் சன்னதியும், சக்கரத்தாழ்வார் சன்னதியும் உள்ளது, அதே சர்வே எண்ணில்தான் 27ம் பிரதிவாதி நகைக்கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 புலவரைப்படத்தில் உள்ள பிரிக்கப்படாத இடத்தில்தான் ஆஞ்சநேயர் சன்னதியும், சக்கரத்தாழ்வார் சன்னதியும் 27ம் பிரதிவாதி நகைக்கடையும் உள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி வழக்குச்சொத்து சர்வே எண்ணில் 27ம் பிரதிவாதி கடை வைத்துள்ள இடம் அவரது அனுபவத்தில்தான் உள்ளது என்றால் சரிதான். கோவிலுக்கு 2009ம் ஆண்டு தக்கார் நியமனம் செய்யப்பட்டார் என்றால் சரியல்ல, 2001, 2002 வாக்கில் நியமனம் செய்யப்பட்டார். தக்கார் நியமனத்துக்கு முன் திருக்கோவில் பரம்பரை அறங்காவலர் பராமரிப்பில் இருந்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.6, 7 தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்கில் அறநிலையத்துறையை பிரதிவாதிகளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கின் 175/1954ல் பெறப்பட்ட தீர்ப்பை வைத்துதான் சட்டத்திற்கு புறம்பாக வழக்குச்சொத்தில் ஒரு பகுதியை விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ. 3 முதல் 5 கிரையப்பத்திரங்களின் சொத்தின் நான்குமாலில் திருக்கோவிலின் சொத்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

// True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி